ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1708/27 - 2011 ජූනි 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.06.02
*1708/27 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்*

*27அ என்னும் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படும் 1981ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27அ என்னும் பிரிவின் (4)ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் —*

*(அ) இக்கட்டளைக்கான முதலாம் அட்டவணையில் இன்னமும் முழுமையாக விவரிக்கப்பட்டதும், 1958ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை அரசப் பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் இலங்கை அரசப் பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்துக்குரித்தாக்கப்பட்டிருந்ததும், பெந்தொட்ட மறுபெயர் பெந்தொட்ட வத்த எனவழைக்கப்பட்டு அறியப்படுவதுமான காணி தொடர்பானதும், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 27அ என்னும் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1994, ஏப்பிறல் 21 ஆந் திகதிய 815/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, அத்தகைய கூட்டுத்தாபனத்துக்குரித்தாக்கப்படுவதற்கான பிரதிபயன் தொடர்பான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாமை என்ற ஏதுக்களின்மீது, பெந்தொட்ட மறுபெயர் பெந்தொட்ட வத்த எனவழைக்கப்பட்டு அறியப்படும் காணியின் பாகமாகவுள்ளதும், இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அட்டகொஹொட்ட வத்த எனவழைக்கப்படும் காணிப் பரப்பளவு தொடர்பானதுமான சொல்லப்பட்ட கட்டளையின் அத்தகைய பாகத்தை இல்லாதொழிப்பதன்மூலம் இத்தால் திருத்துகின்றேன்;*

*(ஆ) இல்லாதொழிப்பின்மேல், அத்தகைய காணிப்பரப்பளவு, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு மீள உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்றும் இத்தால் கூறுகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2011,மே 31.*

**முதலாம் அட்டவணை**

*பெந்தொட்ட மறுபெயர் பெந்தொட்ட வத்த எனவறியப்படும்*
*காணியின் முழுப் பரப்பளவும்*

| அதிவிசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் | காணியின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | இலங்கை அரசப் பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்பட்ட காணிகளின் பரப்பளவு (ஹெக்டயர்) |
|---|---|---|---|---|
| 815/10<br>1994.04.21 | பெந்தொட்ட மறுபெயர் பெந்தொட்ட வத்த | காலி | எல்பிட்டிய | 835.00 ஹெக்டயர் |

## இரண்டாம் அட்டவணை

ஆணைக்குழுவுக்கு மீள உரித்தாக்கப்படும் பரப்பளவு

| குறிப்பிட்ட இல. | காணியின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட காணியின் பரப்பளவு (ஹெக்டயர்கள்) |
|---|---|---|---|---|
| க/181 | அட்டகொஹொட்டவத்த | காலி | எல்பிட்டிய | தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நவதகஹ கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் ரி.டீ.டபிள்யு.பீ. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.11.13 ஆந் திகதிய 1290பி ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு பி எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணித்துண்டு: அதன் எல்லைகள் பின்வருமாறு:- வடக்கில் அதே காணியின் காணித்துண்டு ஏ, கிழக்கில் கோயிற்காணி, தெற்கில் கோயிற் காணி மற்றும் மேற்கில் காணித்துண்டு ஏ, பரப்பளவில் இது, ஒரு ஏக்கர் இரண்டு ரூட் இருபத்தொன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சுகளைக் (1ஏ. 2ரூ. 21.87 பே.) கொண்டுள்ளது |

06-333